# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.813/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிரபு | த–பெ | உய்யவந்தான் |
| ஊர்: | : | மணியாரம்பட்டி | | |
| வயது: | : | 27/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சிற்ப வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.11.2025**

**1 முதல் 3 எதிரிகள் மற்றும் 5 ம் எதிரி ஆஜர், 4 ம் எதிரி இறப்பு**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் மணியாரம்பட்டியில் வசித்து சிற்ப வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்யதுள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2**. ஆஜர் எதிரிகள் எனது நண்பர்கள் என்பதால் தற்சமயம் வழக்கு பொருத்து அவர்களுடன் சமரசமாகி சென்றுவிட்டேன். வழக்கிற்கும்எதிரிகளுக்கும் சம்மந்தமம் இல்லை. சம்பவசமயத்தில் எதிரிகளுக்கும் எனக்கும் முன் விரோதம் இருந்த காரணத்தால் எதிரிகள் அனைவரும்ஒன்று கூடி சட்டவிரோதமாக கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி என்னை அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று புகார் அளித்து விட்டேன். சம்பவசமயத்தில் எதிரிகள் இது போன்ற சம்வத்தில் ஈடுபடவில்லை போலீசாரிடம் எதிரிகள் மீது இருந்த முன் விரோதத்தால் நடவடிக்கை எடுக்குமாறு எனக்கும் மூர்த்தி என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டு எதிரிகள் தாக்கியதாக புகார் அளித்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 18.07.2017 அன்று இருசக்கர வாகனத்தில் வேலைக்கு செல்வதற்காக மூர்த்தி என்பவருடன் சென்று கொண்டிருந்த போது காலை 7.45 மணிக்கு தனக்கு தெரிந்த பவித்ரா என்பவர் நின்று கொண்டிருந்ததாகவும் அவருடன் பேசிக்கொண்டிருந்த போது அருண் மற்றும் சேகர் அங்கு வந்து தன்னிடம் தகறாறு செய்தததாகவும் இருசக்கர வாகனத்தில் ஏற வில்லை என்றால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டியதாகவும் மூர்த்தியும் நானும் ஏறவில்லை என்றால்

கொலை செய்து விடுவதாக சொன்னதன் அடிப்படையில் இருசக்கர வாகனத்தில் தங்கள் இருவரையும் எதிரிகள் கடத்தி சென்றதாகவும், பிள்ளையார் கோவில் அருகில் சென்ற போது பாண்டி மற்றும் பாபு இருவரும் சேர்ந்து கொண்டு உடப்பன் கோவில் அருகில் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி கீழே கிடந்த பீர் பாட்டிலால் தனது தலையின் பின் புறத்திலும் பிற எதிரிகள் பணை மட்டையால் தனது இடது, வலது கை மற்றும் கால் பகுதிகளில் சரமாரியாக அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், அந்த வழியாக வந்த நபர் ஒருவர் மேற்டிப சண்டையை விலக்கி வைத்தாகவும். பின்னர் காயம்பட்ட மூர்த்தி மற்றும் நான் காரைக்குடி தேவகி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும், மேற்படி விவரங்கள் போலீசார் தன்னை விசாரணை செய்த போது ஆஜர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் அளித்து விட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிகள் அனைவரும் எனது நண்பர்கள் என்பதால் அவர்களுடன் சமரசமாக சென்று விட்டு பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.28 14:02:47 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.